பக்கங்கள் 20+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 13 வியாழக்கிழமை 30.10.2025 | அதிர்வு 92

## தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமைச் செயலகம் திங்களன்று யாழில் திறப்பு



(எஸ்.நிதர்ஷன்)
தமிழ் மக்கள் கூட் டணியின் தலைமைச் செயலகம்

02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையினரால்

# இனப்படுகொலைக்கு நீதி வேண்டி போராட்டம்

### செம்மணி அணையா தீப சுற்றுவட்டத்தில் முன்னெடுப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையினரால் இனப்படு கொலைக்கு நீதி வேண்டி 'செம்மணி உடனிருப்பு வேண்டு தல்' இன்று செம்மணி அணையா தீபசுற்றுவட்டத்தில்முன்னெடுக்கப் பட்டது.

இன்று காலை முன்னெடுக்கப் பட்ட இந்தப் அடையாளப் போராட்டத்தில் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களின் மறை மாவட்ட ஆயர்கள், அருட்சகோ தரர்கள் எனப் பல கத்தோலிக்கப் பிரமுகர்கள் பங்கெடுத்தனர்.

முன்பதாக அணையா தீபத் தூ பிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய

02▶



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழ் மக்கள்...**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் இலக்கம் 58, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் குறித்த அலுவலகம் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அந்தக் கட்சியின் உப செயலாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணி எனும் அரசியல் கட்சி, தமிழர் தாயகத்தில் அரசியல் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

**இனப்படுகொலைக்கு...**

தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையினர் அங்கிருந்து ஊர்வலமாக செம்மணி – சித்துப்பாத்தி மயானத்தின் சுற்றுவட்டம் வரை சென்று அங்கும் அஞ்சலி செலுத்தினர்.

இதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறிய தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையின் பொதுச்செயலாளர் சுஜிதர் சிவநாயகம்,

“செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான தகவல்கள் மீண்டும் பல தமிழ் மற்றும் சில ஆங்கில ஊடகங்களின் வழியாக வெளிக்காணரப்பட்டிருப்பதைக் குறித்து இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் அதன் ஆழ்ந்த கவனத்தை ஈர்த்துள்ளது.

இருப்பினும் இது தொடர்பான செய்திகள் குறித்து பிரதான சிங்கள ஊடகங்களின் கவனம் குறைவாக இருப்பது மிகவும் கவலைக்குரியது.

ஒரு நாடாக, இவ்விதமான வலிமிகுந்த உண்மைகளிலிருந்து நாம் பின்வாங்க முடியாது.

இதேநேரம் 2017ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில், 1980களின் இறுதியிலிருந்து இலங்கையில் 60 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் பேர் வரை காணாமல்போயுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2017இல் நிறுவப்பட்ட காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம், பாதுகாப்புப் படையினரின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சுமார் 21 ஆயிரத்துக்கும் அதிகமான முறையீடுகளைப் பெற்றுள்ளது.

இத்தகைய புள்ளிவிவரங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குறித்த துயரம் எமது நாட்டில் ஒவ்வொரு சமூகத்தையும் பாதித்திருக்கின்றது.

அதேவேளையில் சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப முறையாக புதைகுழிகளைத் அகழ வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

இதேநேரம் சர்வதேச தொழில்நுட்ப ஆதரவின் அவசியத்தை சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது. மேலும் அத்தகைய உதவியை தாமதமின்றி நாடுமாறு அரசைக் கோருகின்றோம்.

அத்துடன் வளங்கள் பற்றாக்குறையால் உண்மையைச் சமரசம் செய்ய முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

செம்மணி மனிதப் புதைகுழி தனித்துவமான வேதனையை வெளிப்படுத்துகின்றது.

மற்றைய மனிதப் புதைகுழிகளில் இளையோர் மற்றும் முதியோர் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதும், இங்கு பாடசாலைப் பைகள் மற்றும் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவை உயிர்கள் அழிந்ததையும், மேலும் எமது நாட்டைச் சிதைத்த இன அரசியல் பரிமாணங்களையும் சாட்சியப்படுத்துகின்றன. அந்த அகழ்வுகள் மீதான மௌனம், சமூகங்களுக்கு இடையிலான அவநம்பிக்கையை மேலும் ஆழப்படுத்துவதோடு, போரின் காயங்களை நீடிக்கச் செய்யும் ஆபத்தும் இதில் உள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி விசாரணை முழுமையாகவும் வெளிப்படையாகவும் நிறைவுக்குக் கொண்டுவரப்படும் பட்சத்தில், அது தமது காணாமல் போன உறவுகளுக்கான பதில்களை இன்றும் தேடி அலையும் குடும்பங்களுக்கு ஓரளவு நீதியை வழங்குவதோடு மட்டுமல்லாமல், நீதி தாமதிக்கப்பட்டாலும் அது மறுக்கப்படமாட்டாது என்ற நம்பிக்கையை எம் மக்களுக்கு தரக்கூடிய ஒளிக்கீற்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.


அந்தவகையில் இந்த நாட்டின் மக்களாகவும் பாதிக்கப்பட்டவர்களோடும் அவர்களின் என்பதை குடும்பத்தினரோடும் நாங்கள் எங்களை அடையாளப்படுத்துகின்றோம் – வலியுறுத்துகின்றோம்.

நீதி என்பது மனித உரிமை மட்டுமல்ல அது வேதாகமக் கட்டளையாகும். இதையே இறைவாக்கினர் மீக்கா நமக்கு நினைவூட்டுகிறார், ”நேர்மையைக் கடைப்பிடித்தலையும் இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்?”

எனவே, எத்தகைய வேதனையான தாயிருந்தாலும், உண்மையைத் தேடும் முயற்சியில் அரசு, சிவில் சமூகம் மற்றும் மதச் சமூகங்கள் ஒன்றிணைய வேண்டுமென நாங்கள் அழைக்கின்றோம்.” – என்றார்.

இன்றைய போராட்டத்தில் பேராயர் அதி.வண. நிஷாந்த பெர்னான்டோ (தலைவர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்), பேராயர் அதி. வண. துஷாந்த றொட்ரிகோ (இலங்கைத் திருஅவை, கொழும்பு மறைமாவட்டம்), பேராயர். அதி. வண. வே. பத்மதயாளன் (தென்னிந்திய திருச்சபை, யாழ். மறை மாவட்டம்), அருட்பணி. கிங்சிலி வீரசிங்க (தலைவர், இலங்கை மெதடிஸ்த திருஅவை), அருட்பணி. விலி ரணசிங்க (இலங்கை பெப்டிஸ்ட் திருஅவை), அருட்பணி. சமன் பெரேரா (தலைவர், இலங்கை பிரஸ்பிட்டேரியன் திருஅவை), இணை போதகர் லக்மால் விஜயரெட்ண (தலைவர் கிறிஸ்தவ சீர்திருத்த திருஅவை), அருள்அறிவர் கிறிஸ்சோ ஹெண்டி (தலைவர், இலங்கை மக்கள் தேவ அவை), அருள்அறிவர் ரொமேஷ் புலத்சிங்ஹல (தலைவர், நாற்சதுர சுவிசேஷ திரு அவை) மற்றும் இளம்ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு, இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு, கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம், இலங்கை வேதாகம சங்கம், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், இலங்கை இறையியல் கல்லூரி, சத்திய வசனம், கொழும்பு இறையியல் கல்லூரி, கிறிஸ்துவுக்கான வாலிபர் அமைப்பு, இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தைச் சேர்ந்தோர் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.





# யாழ். இந்துக் கல்லூரியில் இன்று போதைக்கு எதிரான விழிப்புணர்வு







(எஸ்.நிதர்ஷன்)

விஷப் போதைப்பொருள் அச்சுறுத் தலை முழுமையாக ஒழிப்பதற்காக அரசின் புதிய திட்டமான 'முழு நாடுமே ஒன்றாக – தேசிய செயற்பாடு' இன்று வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனை முன்னிட்டு யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையப் பொலிஸாரின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்கள் மத்தியில் போதைப் பொருளின் தாக்கம் எவ்வாறு சமூக மத்தியில் ஏற்படுத்தப்பட்டுகின்றது என்பது தொடர்பில் விழிப்புணர்வுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் மாணவர்கள் மத்தியில் பாடசாலை அதிபர், பொலிஸ் உயர் அதிகாரிகள் கருத்துரைகளை வழங்கினார்கள்.

அத்துடன், விழிப்புணர்வு தெரு நாடக ஆற்றுகையும் நடைபெற்றது



# போதைப்பொருள் பற்றிய தகவல்களை தெரிவிக்க துரித தொலைபேசி இலக்கம்

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கு 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டுடன் இணைந்த வகையில் 24 மணித்தியாலமும் செயற்படும் வகையிலான துரித தொலைபேசி இலக்கம் ஒன்றை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழு அறிமுகப்படுத்தியுள்ளது.



'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டு சபையின் வேண்டு கோளுக்கு இணங்க அறிமுகப்படுத்தியுள்ள '1818' துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொதுமக்களுக்கு நாடு பூராகவும் இயங்கும் போதைப் பொருள் வர்த்தகம், விநியோகம் அல்லது அதனுடன் தொடர்புடைய சந்தேகத்திற்கு இடமான செயற்பாடுகள் குறித்து சரியான தகவல்களை வழங்க முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# திருமலையில் 3 வாகனங்கள் மோதி விபத்து







(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை உள்துறைமுக வீதியின் முன்னைய இலங்கை வங்கி கிளைக் கட்டடத்திற்கு முன்பாக,இன்று காலை மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள் ளன.

கார், பட்டா ரக லொறி,மோட்டார் சைக் கிள் ஆகிய மூன்று வாகனங்களே ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள் ளாகியுள்ளன. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் திருகோணமலை வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுங்க வீதி ஊடாக வந்து உள்துறைமுக வீதிக்கு திரும்பிய பட்டா ரக லொறி மீது திருகோணமலை கடற்படைத்தள பக்க மிருந்து வந்து கொண்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதியுள்ளன.



# யாழில் போதைப்பொருட்களுடன் இளைஞர்கள் நால்வர் சிக்கினர்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகரப் பகுதியில் நேற்று புதன் கிழமை 4 இளைஞர்கள் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 7 போதை மாத்திரைகள் மற்றும் 90 மில்லிகிராம் ஹெரோயின் என்பன மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக் குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நால்வரிடமும் விசாரணை களை மேற்கொண்ட பின்னர் அவர் களை நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போதையின் பாதை

இந்த ஆண்டு ஜனவரி முதல், இலங்கையில் நூறுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதன் விளைவாக 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு பதிவான 103 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 76 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவை என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

அது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட முக்கிய விடயம் ஒன்று மிகுந்த கவனத்துக்குரியதாகின்றது.

நாடு முழுவதும் பதிவான பெரும்பாலான துப்பாக்கிச் சூடுகள் கூலிக்கு அமர்த்தப்பட்ட துப்பாக்கிதாரிகளால் நடத்தப்பட்டன. அவர்களில் பலருக்கு பாதிக்கப்பட்டவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் சமீபத்திய பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன என்பது முதல் தகவல். அது கூட வழமையான குற்றச் செயல்களின் போக்குத்தான. ஆனால் அதற்கும் அப்பால், கூலிக்கு அமர்த்தப்பட்ட துப்பாக்கிதாரிகள் தொடர்பில் வெளியாகியிருக்கும் ஒரு விடயம்தான் அதிர்ச்சி அளிப்பதாக இருக்கின்றது.

புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, இந்த ஒப்பந்தக் கொலையாளிகள் பெரும்பாலும் போதைப்பொருளுக்கு அடிமையான நபர்களாக உள்ளனர். அவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக - முதன்மையாக தங்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு நிதியைப் பெற்றுக்கொள்ளவதற்காக - இப்படி துப்பாக்கிச் சூடு நடத்த ஒப்புக்கொள்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல கொலைகளுக்கு 4 லட்சம் ரூபா முதல் 5 லட்சம் ரூபா வரை மட்டுமே செலவில் கொலையாளிகள் ஒழுங்கு படுத்தப்படுகின்றார்கள் எனவும், சில சந்தர்ப்பங்களில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்கு பணத்திற்குப் பதிலாக போதைப்பொருளே கூலியாக வழங்கப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் வெளியிடும் தகவல்தான் அதிர்ச்சிக்குரியது.

தொடர்ச்சியாகப் போதைப்பொருள் பாவனைக்கு உட்பட்டு, அதற்கு அடிமையானவர்கள் தொடர்ந்து அதனைப் பெறுவதற்காக எந்த எல்லை வரையும் செல்லக்கூடியவர்கள் என்பது தெரிந்த விடயம்தான்.

அவர்களின் அந்தக் குழப்ப மன நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி, அவர்களின் அத்தகைய அவலக் கட்டத்தை தங்களுடைய கொலை கலாசாரத்துக்குப் பாதாள உலகம் குழுவினர் இலகுவாகப் பயன்படுத்துகின்றனர் என்பது நாட்டில் இத்தகைய கொலை கலாச்சாரப் படுகொலைகள் மேலும் தாராளமாக இடம் பெறுவதற்கான வாய்ப்புகளை அளித்துள்ளன என்பதையே நமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆக, துப்பாக்கிச் சூடுகளை நடத்தும் கொலையாளிகள் எய்யப்பட்ட அம்புகள்தான். அவற்றை எய்கின்ற பாதாள உலகக் குழுவினர் மிகக் கொடியவர்களாக இருக்கின்றனர். போதைப் பொருள் பாவனையால் மனம் குழம்பி, தம்மை மறந்த சித்தப்பிரமை நிலையில் இருக்கும் அவல நடத்தை உடையோரை தங்களுடைய கொடூரக் கொலைச் செயல்களுக்குப் பயன்படுத்தும் பாதாள உலகக் குழுவினரை ஈவிரக்கம் இன்றி ஒழிக்க சட்ட - ஒழுங்கு மற்றும் காவல்துறை மாத்திரமல்ல முழு நாடுமே ஒன்றுபட வேண்டும்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் மனநலிவு நிலைமையை பாதாள உலக நபர்கள் தங்களது கொடூரக் கொலை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் சுரண்டலுக்கு முடிவுகட்ட வேண்டும்.

# ஜனாதிபதி அநுரகுமாரவின் எண்ணக்கருவில் 'நாளைய தலைவர்களை உருவாக்குதல்' திட்டம்

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு










நடத்தை மற்றும் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி எதிர்காலத்தில் இந்த நாட்டை சிறந்த தலைமைத்துவப் பண்புள்ளவர்கள் ஆட்சி செய்யவேண்டும் என்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் எண்ணக்கருவுக்கு அமைவாகவே 'நாளைய தலைவர்களை உருவாக்குதல்' திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

–இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் 'நாளைய தலைவர்களை உருவாக் குதல்' (NEXTGEN LEADERS) தேசிய வேலைத் திட்டத்தின் வடக்கு மாகாணத் துக்கு உரிய ஆரம்ப நிகழ்வு கிளி நொச்சி முருகானந்தா கல்லூரியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

மாணவர்களின் மனப்பாங்கு மற்றும் தலைமைத்துவத்தை விருத்தி செய்வது தொடர்பான இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் 8 பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

காலை 7 மணியிலிருந்து இரவு 7 மணி வரையில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது. மாலை மாணவர்களின் பெற்றோருக்கான செயலமர்வும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனதுரையில்,

ஒரு நிறுவனத்தின் வெற்றியும் தோல் வியும் அந்த நிறுவனத்தின் தலைவரின் தலைமைத்துவப் பண்பில்தான் தங்கி யிருக்கின்றது.

இன்று பல திணைக்களங்களின் தலைவர்களிடத்தில் சிறந்த தலைமைத் துவத்தைக் காண முடியவில்லை. ஒரு வேலையை எவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சிந்திப்பதைவிட அதைச் செய்யா மல் விடுவதற்கான காரணங்களைத் தேடுபவர்களாகவே சில திணைக்களங் களின் தலைவர்கள் உள்ளனர். சேவை பெற வருபவர்கள் எமது மக்கள் என்று அந்தத் தலைவர்கள் சிந்திப்பதில்லை. அவர்களுக்கு எப்படி உதவி செய்ய லாம் என்று நினைப்பதில்லை. இவற்றை எல்லாம் மாற்றியமைக்கவேண்டுமாக இருந்தால், அடுத்த தலைமுறையாவது மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்புடன் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

புத்தாக்க சிந்தனையையும் தலை மைத்துவப் பண்பின் ஊடாக நீங்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும். எதிர்காலத் தில் எங்கள் மக்களுக்காக எவ்வாறான விடயங்களைப் புதிதாகச் செய்யலாம். அதன் ஊடாக அவர்களை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று சிந்திக்கின்ற தலைவர்களாக நீங்கள் உருவாக வேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பாக உள்ளது.– என்றார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் வை.ஜெயசந்திரன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு மதி சு.லாவண்யா, கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.க.சிவ னருள்ராஜா, கிளிநொச்சி முருகா னந்தா கல்லூரியின் அதிபர் அ.பங்க யற்செல்வன் மற்றும் வளவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை சிறீதரன் எம்.பி. சந்தித்துக் கலந்துரையாடல்!

**(பூ.லின்ரன்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், யாழ். தேர்தல் மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை அவரது யாழ்.மாவட்ட அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நாடாளுமன்றில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான பிரேரணைகள், விவாதங்களின் போது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தவிசாளர்களால் ஆரோக்கியமான கருத்துக்களை தெரிவிக்கப்பட்டன.

ஒவ்வொரு விடயங்களையும் தனித்தனியாக ஆராய்ந்து உரிய விடயங்களை கேட்டறிந்து கொண்டதுடன் எதிர்கால நடவடிக்கைக்கான விடயங்கள் தொடர்பாகவும் ஒவ்வொரு பிரதேச சபைகளின் தலைவர்களிடம் இருந்தும் விவரங்களை பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், மிகவும் பயனுள்ளதாகவும், ஆரோக்கியமான கலந்துரையாடல்களாகவும் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சந்திப்புகள், கலந்துரையாடல்களை மேற்கொண்டு உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகளையும் எமது செயற்பாடுகளையும் வெற்றிகரமாக முன்னெடுக்க உதவியாக இது அமையும் என சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.





# கிண்ணியாவில் பட்டா ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்து!

**(முஹம்மட் றிஸ்னாத்)**

கிண்ணியா - கண்டி பிரதான வீதி, முனைச்சேனை பகுதியில், சிறிய ரக லொறி ஒன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி, விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து, இன்று (30) காலை முனைச்சேனை சுமையா அரபு கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா நோக்கி வந்து கொண்டிருந்த வாகனமே, இவ்வாறு விபத்துக்குள்ளானது. தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து, மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# யாழ்ப்பாணத்தின் மரபுச் சின்னங்கள்: மக்கள் பண்பாட்டு வாழ்வுடன் இரண்டறக் கலந்த மரபு...!

## நல்லூரின் மணி ஒலி முதல் நயினாதீவின் கடல் காற்று வரை...

**அப்துல் அஸீஸ் அஸ்மா**
**(ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்)**

யாழ்ப்பாணம் வட இலங்கையின் முத்திரையாக விளங்கும் ஓர் அபூர்வ நிலம். இந்த நகரம் வெறும் புவியியல் எல்லைகளால் வரையறுக்கப்பட்டது. அது ஒரு நாகரிகத்தின் நெஞ்சுக்குரல், தமிழர் பண்பாட்டு பெருமையின் சின்னம். கடலால் சூழப்பட்ட இந்த நிலம், வரலாறு, மதம், கலை, கல்வி, மொழி, மரபு ஆகிய அனைத்தும் சங்கமிக்கும் ஓர் ஆன்மீக மையமாக திகழ்கிறது. நல்லூரின் மணி ஒலி முதல் நயினாதீவின் கடல் காற்று வரை, யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூச்சிலும் பாரம்பரியத்தின் மணம் கலந்திருக்கிறது.

இங்கு மரபு என்பது ஒரு நினைவுச் சின்னம் அல்ல . அது மக்களின் வாழ்வாகவும், கலாச்சாரத்தின் இதயத் துடிப்பாகவும் உள்ளது. அதனால்தான் யாழ்ப்பாணம் 'வடக்கின் இதயம்' என்றும், 'தமிழர் மரபின் உயிர்க்கோடு' என்றும் வரலாற்றாசிரியர்கள் புகழ்கின்றனர்.

அந்த வகையில் இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள இந்த நகரம், தமிழர் நாகரிகத்தின் வரலாற்றுத் தாயாக விளங்குகிறது. கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் இருந்து மனிதக் குடியிருப்புகள் இருந்ததாக தொல்லியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இம்மண் கலை, கல்வி, மதம், வணிகம், கைவினை, அரசியல் எனப் பல துறைகளில் செழித்து விளங்கியது. யாழ்ப்பாணத்தில் காணப்படும் மரபுச் சின்னங்கள் இன்று வரை மக்களின் அன்றாட வாழ்க்கையில், அவர்களின் மத வழிபாட்டிலும், கலாச்சார நிகழ்வுகளிலும், சமூக உறவுகளிலும் இரண்டற கலந்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் இதயம் நல்லூர் கந்தசுவாமி கோயில். இது யாழ்ப்பாணத்தின் ஆன்மீக மையம் மட்டுமல்ல, மக்களின் பண்பாட்டு அடையாளத்தின் உயிர் துடிப்பாகும். 13 ஆம் நூற்றாண்டில் ஆரியசக்கரவர்த்தி அரசரால் நிறுவப்பட்டதாகக் கருதப்படும் இந்தக் கோயில், சோழர் மற்றும்

தொடர்ச்சி ▼






# மக்கள் பண்பாட்டு வாழ்வுடன் இரண்டறக் கலந்த மரபு...!

தொடர்ச்சி ▲

பாண்டியர் காலக் கோயில்களின் திராவிடக் கட்டடக் கலையின் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. கோபுரங்களின் சிற்ப வடிவங்கள், உலோக வாகனங்கள், தெய்வ சிலைகள் ஆகியவை வெறும் மதச் சின்னங்கள் அல்ல. அவை வடக்கின் சிற்ப, உலோக, கைவினைத் தொழில்களின் கலாச்சார அடையாளங்களாகும்.

நல்லூரின் ஆண்டு திருவிழா வெறும் பக்தி நிகழ்வாக மட்டும் இல்லாது, மக்களின் வாழ்க்கைத் துடிப்பை வெளிப்படுத்தும் கலாச்சார நிகழ்வாகும். இசை, நடனம், அலங்காரம், உறவினர் சந்திப்பு, வணிகம், சமூக ஒருமைப்பாடு என்று யாழ்ப்பாணத்தின் கலாச்சாரம் அனைத்தும் இந்த விழாவில் ஒரே தளத்தில் இணைகின்றன. அதனால் நல்லூர் கோயில் என்பது மரபுச் சின்னமாக இருப்பதோடு, யாழ்ப்பாண மக்களின் சமூக வாழ்வின் உயிரோட்டமாகவும் விளங்குகிறது.

யாழ்ப்பாண கோட்டை, 17ஆம் நூற்றாண்டில் டச்சு ஆட்சியில் கட்டப்பட்டது. இது யாழ்ப்பாணம் ஒரு வணிக மையமாக இருந்ததை வெளிபபடுத்துகிறது. கோட்டையின் கட்டட அமைப்பு, அகழி அமைப்பு, சுவர் வடிவமைப்பு ஆகியவை டச்சு இராணுவப் பொறியியல் திறமையை வெளிப்படுத்தினாலும், அதன் உட்பகுதியில் வாழ்ந்த தமிழர், சிங்களர், முஸ்லிம் கைவினைஞர்கள் இணைந்து இயற்றிய பொருள்கள் கலாச்சார பரிமாற்றத்தையும் காட்டுகின்றன. இன்றளவும் கோட்டையின் சுற்றுவட்டாரத்தில் வாழும் குடும்பங்கள் தங்கள் பூர்வீக மரபை அந்த இடத்தோடு இணைத்துக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண நூலகம், மரபின் அறிவுச் சின்னம். 1933 இல் நிறுவப்பட்ட இது, தென்காசியாவிலேயே சிறந்த தமிழ் நூலகமாக விளங்கியது. 1981 இல் தீயிட்டு எரிக்கப்பட்டதும், அதன் மறுஉயிர்த்தலும் யாழ்ப்பாணத்தின் கல்வி, கலாச்சாரத்தின் வரலாற்றுக் குறியாக மாறின. நூலகத்தின் மீண்டும் எழுச்சி, தமிழர் சமூகத்தின் கல்வி ஆற்றலையும் மரபைக் காக்கும் உறுதியையும் சான்றாக நிறுத்துகிறது. இன்று நூலகம் வெறும் புத்தக நிலையம் அல்ல அது ஒரு சின்னம் அறிவு அழிக்கப்படலாம், ஆனால் மீண்டும் எழலாம் என்ற நம்பிக்கையின் சின்னம்.

கந்தரோடை எச்சங்கள் யாழ்ப்பாணத்தின் பண்டைய பௌத்த மரபின் சான்றாக விளங்குகின்றன. கி.மு. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சின்னங்கள், யாழ்ப்பாணம் பல மத நாகரிகங்களின் சந்திப்பிடமாக இருந்ததைக் காட்டுகின்றன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சிறிய ஸ்தூபங்கள், பளிங்கு சிற்பங்கள், பித்தளைக் குடைச்சல் பொருள்கள் ஆகியவை மக்களின் பன்மத கலாச்சார சகிப்புத்தன்மையையும், பௌத்த, தமிழ் உறவின் பழமையான இணைப்பையும் வெளிப்படுத்துகின்றன.

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் யாழ்ப்பாணத்தின் பண்டைய கடல் வழி வர்த்தக நாகரிகத்துடன் தொடர்புடையது. நயினாதீவு, பண்டைய நாகதீவு என்று குறிப்பிடப்பட்டது. இது இந்திய கடற்கரை நகரங்களுடன் வணிக உறவுகள் கொண்டதாக வரலாற்று ஆதாரங்கள் (பண்டைய கிரேக்க புவியியல் நூல்கள்) குறிப்பிடுகின்றன. நாகபூசணி அம்மன் கோயில், கடல் வழிப் பயணிகளுக்கு பாதுகாப்பு தெய்வமாக வணங்கப்பட்டதுடன், இன்று வரை கடல்சார் வாழ்வியலோடு மக்களின் நம்பிக்கையையும் இணைத்துக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் குளங்கள் மற்றும் நீர்நிலைகள் கூட மரபுச் சின்னங்களே. கோப்பாய், வல்வெட்டைத் துறை, கரைநகர், உடுப்பிட்டி போன்ற இடங்களில் காணப்படும் பழைய குளங்கள், சோழர் கால நீர்ப்பாசன முறையின் சான்றுகளாகும். இவை இன்று விவசாயத்துக்கும் கோயில் வழிபாடுகளுக்கும், ஊர்திருவிழா நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுகின்றன. மக்களின் கலாச்சார வாழ்வில் "நீர்" என்பது புனிதமானது. அது வாழ்க்கையின் அடிப்படையாகவும் தெய்வத்தின் சின்னமாகவும் கருதப்படுகிறது.

பழைய வீடுகள் யாழ்ப்பாணத்தின் வீட்டுக் கட்டடக் கலையும் மக்களின் பண்பாட்டு நுண்ணறிவை வெளிப்படுத்துகிறது.

மரத்தூண்களும் செங்கல் ஓடுகளும் கொண்ட "நாட் மண்டபம்", "மட்டப் பள்ளம்", "திண்ணை" போன்ற கூறுகள் சமூக உறவுகளின் தளமாக இருந்தன. இவை யாழ்ப்பாணத்தின் காலநிலை, சமூக அமைப்பு, உறவுமுறை, கலைநயம் ஆகிய

தொடர்ச்சி ▼



# மக்கள் பண்பாட்டு வாழ்வுடன் இரண்டறக் கலந்த மரபு...!

தொடர்ச்சி ▲

வற்றை பிரதிபலிக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் இசை மற்றும் நாடக மரபுகள் கூட அதன் மரபுச் சின்னங்களின் அங்கமாகும். பாரதநாட்டியம், தேவர் பாடல்கள், வில்லுப்பாட்டு, நாடகம், மற்றும் கோயில் இசை ஆகியவை தலை முறைகளாக கடத்தப்பட்ட கலை வடிவங்கள். நல்லூர் திருவிழாவின் தாள வாத்தியங்கள், “நாதஸ்வரம்” இசைகள், ‘தவிலின்’ ஒலி ஆகியவை மரபும் கலையும் இணைந்த பண்பாட்டுச் சின்னங்களாகின்றன.

யாழ்ப்பாணக் கைவினை மரபாகத் தாமிர வேலைப்பாடு, மண்பாண்டம், நெய்தல், மரச் சிற்பம் போன்றவை, கோயில்களும் வீடுகளும் இணைந்த கலாச்சார வாழ்வின் ஓர் அங்கமாக இருந்தன. இந்தக் கைவினைகள் வெறும் தொழில் அல்ல. அவை மதச் சடங்குகளுக்கும், சமூக நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படை ஆதாரங்களாக இருந்தன.

கிறிஸ்தவ மரபுச் சின்னங்கள் குறித்து பார்ப்போமிடத்து, குறிப்பாக யாழ்ப்பாண புனித யோசேப்பு கத்தீரல், புனித மரியாள் ஆலயம் போன்றவை, கிறிஸ்தவ மதத்துடன் யாழ்ப்பாண தமிழர்களின் கலாச்சார உறவைக் காட்டுகின்றன. திருமணங்கள், திருநாள்கள், தேவார நிகழ்ச்சிகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தின் பன்மத பண்பாட்டு கலவையைக் குறிக்கின்றன.

முஸ்லிம் மரபுச் சின்னங்கள், குறிப்பாக சந்திலிப்பாய், புன்னாலை, கரைநகர் பகுதிகளில் காணப்படும் பழைய மசூதிகள், யாழ்ப்பாணத்தின் வர்த்தக மரபையும் பல மதங்களின் இணைந்த வாழ்வையும் வெளிப்படுத்துகின்றன.

ஆனால், இன்றைய யாழ்ப்பாணம், இந்த மரபுகளை அழிக்கும் வேகமான நகரமயமாக்கலின் சுழலில் சிக்கியுள்ளது. புதிய சாலைகள், வணிக வளாகங்கள், குடியிருப்பு திட்டங்கள் ஆகியவை பழமையான வீடுகள், கோயில்கள், குளங்கள், மரத்தூண்கள் ஆகியவற்றை அழித்து வருகின்றன. நல்லூர் சுற்றுவட்டாரத்தில் பழைய வீடுகள் இடிக்கப்பட்டு, கொங்கிரீட் கட்டடங்கள் எழுந்துள்ளன.

மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பது, வெறும் கல்லுக்கல்லாகச் செய்யும் முயற்சி அல்ல. அது ஒரு நினைவுச் சமூகத்தைப் பாதுகாப்பது. யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுக்கு இம்மரபுகள் வெறும் பழைய கட்டடங்கள் அல்ல, அவை அவர்களின் குடும்ப வரலாறு, சமூக உறவு, மத அடையாளம், கலாச்சார தளமாக விளங்குகின்றன. நல்லூர் தெருக்களில் ஒவ்வொரு வீடும் ஒரு கதையைச் சொல்கிறது. ஒவ்வொரு கோயிலும், குளமும் ஒரு தலைமுறை நினைவாக இருக்கின்றன.

இவற்றை சான்றாதாரங்கள் தெளிவாகக் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தின் தொல்லியல் தளங்கள் 200 இற்கும் மேற்பட்டவை. இலங்கை தொல்லியல் துறையின் பட்டியலில் கந்தரோடை, நயினாதீவு, நல்லூர், புன்னாலை, அச்சுவேலி, கோப்பாய் ஆகியவை முக்கிய பாதுகாப்பு தளங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவை பலவும் தற்போதைய பராமரிப்பின்மையால் சிதைந்து வருகின்றன.

அரசால் ‘Cultural u;eritage Conservation Project’ என்ற பெயரில் சில முயற்சிகள் தொடங்கப்பட்டாலும், அவை செயல்முறையிலேயே தடைபடுகின்றன.

மக்களின் பங்களிப்பின்றி மரபுக் காப்பு சாத்தியமில்லை. மரபுச் சின்னங்களை டிஜிட்டல் ஆவணப்படுத்தல், புகைப்பட பதிவுகள், 3 டி ஸ்கேனிங், கல்வி ஊக்கத் திட்டங்கள் போன்ற புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பள்ளிகளில் யாழ்ப்பாணத்தின் மரபுகள் குறித்து பாடங்கள் சேர்க்கப்படுதல், மாணவர்களை மரபுத் தளங்களுக்கு அழைத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகள் அவசியம்.

இவ்வாறாக யாழ்ப்பாணத்தின் மரபுச் சின்னங்கள் நல்லூர் கோயிலின் மணி ஒலியிலிருந்து நயினாதீவு கடலலைவரை மக்களின் வாழ்க்கை ஒலியாகவே நிலைத்திருக்கின்றன. அவற்றை காப்பது கடந்த காலத்தைப் போற்றுவதற்காக அல்ல. எதிர்காலம் அடையாளம் இழக்காதிருக்கவே.

மரபு என்பது கல்லிலும், கோயிலும் இல்லை அது மக்களின் நெஞ்சிலும் நம்பிக்கையிலும் உள்ளது. யாழ்ப்பாணம் மக்களும் மரபும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத உறவாக இணைந்துள்ளன. அதுவே யாழ்ப்பாணத்தின் உண்மையான அடையாளம்.

யாழ்ப்பாணத்தின் மரபுச் சின்னங்கள் வெறும் வரலாற்றுச் சான்றுகள் அல்ல. அவை உயிருள்ள சமூக மரபுகள். மக்களின் வழிபாடு, இசை, கலை, கல்வி, வாழ்க்கைமுறை ஆகிய அனைத்தும் அவற்றோடு நெருக்கமாக பின்னிப் பிணைந்துள்ளன. எனவே, மரபைக் காப்பது என்பது யாழ்ப்பாணம் மக்களின் ஆன்மாவையே காப்பதற்குச் சமமானது.

# போதைப்பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்கு 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டு நிகழ்வு










**(பாறுக் ஷிஹான்)**

போதைப்பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டு நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இன்று (30) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதற்கமைய இந்த நிகழ்வானது கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்த நிலையில் 'போதைப் பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்கான முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாடு தொடர்பில் கல்முனை பிரதேச செயலகத்தில் உறுதி எடுத்தல் நிகழ்வு கல்முனை பிரதேச செயலாளர் சட்டத்தரணி அஷ்ஷெய்க் ரீ.எம்.எம். அன்சார் தலைமையில் இன்று நடைபெற்றது.

இதன்போது போதைப்பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாடு தொடர்பில் பிரதேச செயலாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ மஜீட் , பிரதேச செயலக கணக்காளர் கே.எம்.எஸ். அமீர் அலி , பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பஸீல், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜனூபா நௌபர், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி அன்வர், அபிவிருத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் கே.எல் யாஸீன் பாவா, போதைப் பொருள் முற்தடுப்பு அபிவிருத்தி உத்தியொகத்தர் றாசீக் நபாயிஸ், மற்றும் பல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து விவாதிக்க முடிந்தாலும், நாட்டிலிருந்து போதைப் பொருள் பேரழிவை ஒழிப்பதற்கான தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதில் இனி மேலும் விவாதித்துக் கொண்டிருப்பதற்கு இடமில்லை.

போதைப்பொருள் பேரழிவை ஒழிப்பதற்கான துரித வேலைத் திட்டத்துக்காக முழு நாடும் ஒன்றுபட வேண்டும்.

தற்போது தேசிய பேரழிவாக மாறி இளைஞர் சமூகத்தைப் போன்றே பாடசாலை மாணவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவித்து வரும் போதைப் பொருள் வர்த்தகத்தை மையமாகக் கொண்டு அநேகமான குற்றங்கள் நடப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தேசிய மட்டத்தில் அரசியல் தலைமைத்துவம், செயற்திறனாக முடிவெடுக்கும் பொறிமுறை மட்டுமன்றி பரந்த பொதுமக்கள் பங்கேற்புடன் கூடிய தேசிய மட்டத்திலான வேலைத்திட்டத்தின் ஊடாக போதைப்பொருள் அச்சுறுத்தலை முழுமையாக ஒழிக்க வேண்டும்.

அந்த தேசிய நோக்கத்தை அடைவதற்காக 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாடு முன்னெடுக்கப்படுவதோடு பரந்தளவிலான பிரச்சார செயல்முறையின் ஊடாக போதைப்பொருள் அச்சுறுத்தல் குறித்து சமூகத்தின் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு பாரிய திட்டமொன்றாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்று ஜனாதிபதி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களுக்கான இலவச கண் மருத்துவ முகாம்

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சும் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையும் இணைந்து மூன்றாவது கண்ணுக்கு சிகிச்சை என்ற தொனிப்பொருளில் கண் தொடர்பான தகவல்களை சமூகமயமாக்கும் மகத்தான பணியை மேற்கொண்டு வரும் ஊடகவியலாளர்களுக்கான இலவச கண் மருத்துவ முகாமை நடத்தவுள்ளன.

நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 08 மணி முதல் 01 மணி வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இலவச கண் மருத்துவ முகாமை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றைய இலவச மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கு இரத்த அழுத்தம் மற்றும் சக்கரை நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.இலவச மூக்கு கண்ணாடியும் வழங்கப்படும் எனவும் அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச். எஸ். கே. ஜே. பண்டார தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பருத்தித்துறை சென். தோமஸ் பெண்கள் பாடசாலையில் தலைமைத்துவப் பயிற்சி

(பூ.லின்ரன்)

பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் பாடசாலையில் நேற்று (29) மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு இடையே ஏற்படுகின்ற மனக்குழப்பம் தலைமைத்துவம் மற்றும் குழுவாக செயற்படுகின்ற தன்மை போன்ற அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வை அருட்சகோதரர் ஜோர்ச் கிங்டன் நெறிப்படுத்தி இருந்தார். இந்த நிகழ்வில் மேலும் பல நிகழ்வுகள் ஊடாக பல சிந்தனைகளும் தகவல்களும் மாணவிகளிடையே வழங்கப்பட்டன.

இதில் மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். இந்த நிகழ்வின் ஊடாக மாணவிகள் தங்களது மன நிலையில் சிறந்த ஒரு மாற்றம் மற்றும் பல சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதையும் கற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் நாளை ஞானச்சுடர் மலர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஞானச்சுடர் ஐப்பசி மாத 334 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில், வெளியீட்டுரையை ஐ.கோ.சந்திரசேகரமும், மதிப்பீட்டுரையை சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசனும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்படவுள்ளன.



# பின்காலனித்துவமும் கடன் வசதிகளும்...!

இன்றைய உலகினில் பல்வேறு நாடுகள் தம்முடைய பொருளாதார தேவை, அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற பல்வேறு தேவைகளின் நிமித்தம் மற்றொரு நாட்டைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றன. உலகில் வல்லரசு நாடுகளாக காணப்படுகின்ற பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா, சீனா, ஐக்கிய அமெரிக்க போன்ற நாடுகள் இன்றைய காலக்கட்டங்களில் பொருளாதாரத்தில் பலவீனமான நாடுகளுக்கு உலக நாணய நிதியம், உலக வங்கி போன்ற அமைப்புகளின் ஊடாக கடன் வசதிகளை வழங்குகின்றன. இவ்வாறு கடனைப் பெற்றுக் கொள்ளும் நாடுகள் அந்த கடனை திருப்பி கொடுகின்றதா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

உலக நாடுகள் 1945 இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் காலனித்துவத்தில் இருந்து விடுபட்டு சுதந்திர நாடுகளாக காணபட்டாலும் கூட, இன்று பின்காலனித்துவம் என்ற சிலந்தி வலைக்குள் பல நாடுகள் சிக்குண்டுதான் காணப்படுகின்றன. அந்த வகையில் பின் காலனித்துவ கருத்தியல் என்றால் என்ன, அதன் பண்புகள் என்ன, பின்காலனித்துவத்தின் விளைவுகளில் கடன் உதவி வசதிகளின் தன்மை போன்றவற்றை இந்த எழுத்தாவணத்தில் ஊடாக ஆராயலாம்.

பின் காலனித்துவம் என்பது காலனித்துவ கருத்தியலின் தாக்கத்தையும் அதன் விளைவுகளையும் காலனித்துவ ஆட்சி முறைமை



**மதிவாணனன் கார்த்திகேசன்**
(ஊடகக்கற்கைகள் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

முடிவடைந்த பின்னரும் அதன் தாக்கம் மற்றும் விளைவுகள் அரசியல், சமூக, பொருளாதாரத்தில் , கலாசாரத்தில் செல்வாக்கு செலுத்தும் எண்ணக்கரு பின் காலனித்துவம் என்று குறிப்பிடலாம். பின் காலனித்துவம் என்ற கருத்து பாகிஸ்தான் எழுத்தாளரான ஹம்ஷா ஆளாவி என்பவரே முன்வைத்தார். 1972ஆம் ஆண்டு New Left Review என்ற சஞ்சிகையில் வெளியிட்ட "The State in Post-Colonial Societies Pakistan and Bangladesh" என்ற கட்டுரையின் ஊடாகவே அவர் இந்த கருத்தை வெளியிட்டார். அதன் பின்னரே பின் காலனித்துவம் என்ற எண்ணப்பாடு தொடர்பாக சிந்திக்க வேண்டிய நிலை உண்டானது.

பின்காலனித்துவத்தின் பண்புகளாக சிலவற்றைக் குறிப்பிடலாம். முதலாவதாக காலனித்துவத்தின் பண்புகளை மேலும் முன்னோக்கி இந்த காலகட்டத்திலும் கொண்டு செல்வதாக காணப்படும். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட நாடாளுமன்ற ஆட்சி முறைமை, மெகாலய கல்வி முறைமை, சட்ட முறைகள் போன்றன காலனித்துவ ஆட்சிக்கு பின்னரும் சில சீர்திருத்த முறைமைகளுடன் தொடர்கின்றன. அடுத்த பண்பாக அரசியல், பொருளாதாரம் ரீதியாக பலம் பொருந்திய நாடுகள் மறைமுகமாக அரசியல், பொருளாதார ரீதியாக பலவீனமான நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்துதல் காணப்படுகின்றது. கடன் உதவிகள் வழங்குதல், குத்தகையின் கீழ் ஒரு நாட்டின் வளங்களை பயன்படுத்தல்,யுத்த நிலைமைகளின்போது நேரடியாக, மறைமுகமாக ஆயுதங்கள் வழங்குதல் போன்றவற்றை இந்த பண்பின் கீழ் நோக்கமுடியும்.

பின்காலனித்துவத்தின் மற்றொரு பண்பாக விளிம்பு நிலை மக்களின் குரல்கள் வெளிக்கொணரப்படல் காணப்படுகின்றது. இன, மத, மொழி ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட சமூகங்களில் பெரும்பான்மை சமூகத்தினரின் பலம் வெளிப்படும்போது பலவீனமான சிறுபான்மை சமூகம் குரல் கொடுப்பதற்கான வாய்ப்பைப் பின் காலனித்துவம் பெற்றுத்தருகின்றன. ஜனநாயக ஆட்சி முறைமை, அடிப்படை உரிமைகள், அரசியல் சார்ந்த பதவி நிலை போன்ற விடயங்களில் சிறுபான்மை மக்களும் இடம்பெற வாய்ப்பளிக்கின்றது.

இறுதியாகக் காலனித்துவத்தில் காணப்பட்ட மொழி, மதம், கலாசாரத்தைத் தம்முடைய மொழியாகவும் மதமாகவும் கலாசாரமாகவும் போற்றும் நிலை இன்றும் காணப்படுகின்றமையைக் குறிப்பிடலாம்.

இன்றைய உலகில் பல நாடுக

தொடர்ச்சி ▼

# பின்காலனித்துவமும் கடன் வசதிகளும்...!

**தொடர்ச்சி ▲**

ளுக்கு உலக நாணய நிதியம், உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புக்கள் கடன் உதவிகளை பெற்றுக் கொள்கின்றன. 1945 டிசெம்பர் 27 பிரெட்டன் வூட்ஸ் மாநாட்டில் பங்கேற்று, ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் கையெழுத்திட்ட 44 நாடுகளில் முக்கிய நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சீனா போன்ற நாடுகள் ஆரம்பத்தில் கடன் உதவிகளைச் சர்வதேச அமைப்புகளின் ஊடாக வழங்கின. ஆனால் இன்று ஜப்பான், சிங்கபூர், கனடா, ஜேர்மனி, சுவிஸர்லாந்து, நோர்வே என்பன உலக நாடுகளுக்கு கடனுதவிகள் வழங்குகின்றன. கடன் உதவி வழங்குகின்ற நாடுகள் தமது முதலீட்டு நலன்கள், வர்த்தக ரீதியான ஆதாயம், இராஜதந்திர உறவுமுறைகள் போன்றன பல்வேறு நோக்கங்களுக்காக வழங்குகின்றன. ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆபிரிக்க மேம்பாட்டு வங்கி போன்றன தமது வலய ரீதியான அபிவிருத்திக்கு கடனுதவிகள் வழங்குகின்றன.

கடன் தொகை சார்ந்து சிந்திக்கும்போது 'நிகர சர்வதேச முதலீட்டு நிலை' (Net International Investment Position - NIIP) தொடர்பாக அறிந்திருப்பது முக்கியமான ஒன்றாகும். 'நிகர சர்வதேச முதலீட்டு நிலை' என்பது ஒரு நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களுக்கும் அதிலும் வழங்கப்பட்ட கடன், வெளிநாட்டுப் பங்குகள், முதலீடுகள் போன்றவற்றுடன் வெளிநாட்டவரிடம் இருந்து வாங்கிய கடன், வெளிநாட்டு முதலீடு ஆகிய இரண்டுக்கும் இடையேயான வித்தியாசமாகும். இதில் வருகின்ற பெறுமானம் நேர்மறையாக (Positive) இருந்தால், அந்த நாடு ஒரு நிகர கடன்கொடுப்பவராகவும், அதே எதிர்மறையாக (Negative) இருந்தால், அந்த நாடு ஒரு நிகர கடனாளி ஆகவும் கணிக்கப்படுகின்றது.அந்தவகையில் 2025ஆம் ஆண்டில் 3.3 டில்லியன் அமெரிக்க டொலர்களுடன் இன்றும் முன்னணியில் ஜப்பான் விளங்குகின்றது. மேலும் சீனா 2.9 டில்லியன், சுவீடன் 1.5 டில்லியன், கனடா 1.3 டில்லியன் என பல பொருளாதார பலம்மிக்க நாடுகள் இருக்கின்றன. ஆனால் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இலங்கை, பனாமா, சாம்பியா போன்ற நாடுகள் இந்த பட்டியலில் மறை பெறுமானத்தில்தான் காணப்படுகின்றன.

இலங்கையின் 'நிகர சர்வதேச முதலீட்டு நிலை' 2024ஆம் ஆண்டில் செப்ரெம்பரில் 51.92 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. உலக நாணய நிதியத்தில் மாத்திரம் 2025ஆம் ஆண்டில் செப்ரெம்பர் 30ஆம் திகதி நிலவரப்படி நிலுவையில் உள்ள கொள்முதல் மற்றும் கடன்கள் மாத்திரம் 1690.76 மில்லியனாகக் காணப்படுகின்றது. அதே சமயம் உலக நாணய நிதியத்துக்குப் பங்களிப்புத் தொகையாக 578.8 மில்லியன் காணப்படுகின்றது. .உலக நாணய நிதியத்தின் சிறப்பு வரைவு உரிமைகளின் கீழ் 0.69 மில்லியன் ரூபா காணப்படுகின்றது.

உலக நாணய நிதியத்தின் தரவுகளுக்கு அமைய இலங்கையை ஒப்பிட்டளவில் நோக்கும் போது பங்களிப்பு தொகையை விட அதிகளவிலான கடன்தொகையைப் பெற்றுள்ளதுடன் இன்றும் உலக பொருளாதாரத்தில் நடுத்தர நிலையினை அடைவதற்காக போராடுகின்ற நாடாக குறிப்பிட முடியும்.

இலங்கை இன்று இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிடம் கடனுதவிகளைப் பெறுவதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். ஆனால் உண்மையில் 18 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இருதரப்பு கடன் மறுசீரமைப்பு திட்டங்களில் கையெழுத்திட்டுள்ளன. சுவீடன், ஜேர்மனி, ஹங்கேரி , டென்மார்க் போன்ற நாடுகள் காணப்படுவதுடன் மேலும் குவைத் , பாகிஸ்தான்,ஈரான் போன்ற நாடுகளிடம் 0.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது. இதனை 2024 ஜுன் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை தொடர்பாக எமது நாட்டின் நிதி அமைச்சின் பொதுக்கடன் முகாமைத்துவ அலுவலகத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன.

கடன்தொகை சார்ந்து பல்வேறு நாடுகள் இலங்கைக்கு கடன் வழங்கியிருந்தாலும் கூட இலங்கைக்கு உரித்தான துறைமுகங்களை ஒரு சில நாடுகள் குத்தகை முறையின் கீழ் ஆதிக்கம் செலுத்துகின்றன. சீனாவின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துக்காக 2017 ஆம் ஆண்டில் இருந்து சீனாவின் மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல் டிங்ஸ் நிறுவனத்துக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு இந்தியாவின் அதானி போர்ட்ஸ் மற்றும் இலங்கையின் ஜான் கீல்ஸ் இணைந்து 35 ஆண்டுகளுக்குக் கொழும்பு மேற்கு துறைமுகத்தைக் கைப்பற்றியுள்ளன. துறைமுகம் மட்டுமின்றி கொழும்பு போர்ட் சிட்டித் திட்டததுக்காக 2017ஆம் ஆண்டில் சீனாவின் ஹார்பர் எஞ்ஜினீயறிங் கம்பனிக்கு 99 ஆண்டுகளுக்குக் கொழும்புக்கு அருகில் உள்ள 269 ஹெக்ரெயர் கடற்பிரதேசம் வழங்கப்பட்டுள்ளது. இதனை உலக நாணய நிதியத்தின் 2024 ஆம் ஆண்டின் ஜுன் வெளியிட்ட அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளன.

குத்தகை முறையில் வழங்கப்படும் இந்த துறைமுகங்கள் மீள பெறப்படுமா? என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். இலங்கை என்ற சிறிய நாடு பல கடன் உதவிகளை பெற்றுக்கொண்டாலும் கூட, பொருளாதார ரீதியாக பலம் பொருந்திய நாடுகளின் கைகளில் கீழ் இன்று பின்காலனித்துவத்துக்கு உள்வாங்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.







# உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு கல்முனையில் விழிப்புணர்வு நிகழ்வு

**(பாறுக் ஷிஹான்)**

உலக பாரிசவாத தினம் ஒக்ரோபர் 29 ஆம் திகதியாகும். இந்தத் தினத்தை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவு ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நேற்று புதன்கிழமை (29) இடம்பெற்றது.

'ஒவ்வொரு நிமிடமும் பெறுமதியானது' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கல்முனை வடக்கு மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு நிகழ்வு சைக்கிள் ஓட்டம், நடைபவனி, தொங்கோட்டம், துண்டுப்பிரசுரம் விநியோகம் அடங்களான பேரணியாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைவரை சென்றது. அங்கிருந்து அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையை அடைந்து மீண்டும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நிறைவடைந்தது.

பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாட் இந்த நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.










# சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் வித்தியாலயத்தில் மாணவர் சந்தை

**(நிப்ராஸ் லத்தீப்)**

சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் வியாபார சந்தை போன்ற சமூகத் தேவைகள் பற்றிய விளக்கத்தை மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதை இலக்காக கொண்டு நடத்தப்பட்ட தரம் 08 மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.சி. நஸ்லின் ரிப்கா அன்சார் தலைமையில் நடைபெற்றது.

செயன்முறை தொழிநுட்ப பாட ஆசிரியை திருமதி சாமிலாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா அப்துல் மலீக் பிரதம அதிதியாகவும், சிரேஷ்ட ஆசிரிய ஆசோசகர் எம்.எம்.எம். ரபீக், கௌரவ அதிதியாகவும், சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய பிரதி, உதவி அதிபர்கள் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்தை மாணவர்களின் சமூக தொடர்பாடல் திறன் விருத்தியை வெளிக்கொணரும் நோக்கில் நடத்தப்பட்டது.

மாணவர்களுக்கு சிறந்த வெளிகாட்டலை கொடுக்கும் என்ற அடிப்படையிலும், மரக்கறி மற்றும் பழ வகைகளை இனங்காணும் ஆற்றலைப் பெறல், தராசில் நிறுத்தல் மற்றும் அளத்தல் செய்யும் திறனைப் பெறுதல், பணப்பரிமாற்றம், ஒன்றிணைந்து ஒரு வேலையில் ஈடுபடும் பழக்கத்தைப் பெற்றுக்கொள்ளல், குழுச் செயற்பாட்டுத் தன்மையை விருத்தி செய்தல் போன்ற விடயங்களை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்பட்டது.












# காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் போட்டி

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்புப் போட்டிகள் நடத்தப்பட்டன.

காங்கேசன்துறை சந்தை வீதியில் அமைந்துள்ள உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் பூ.பிரபாகர் தலைமையில் வாசிப்புப் போட்டிகள் நடத்தப்பட்டன.

மாணவர்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி, நடுவர்களால் வழங்கப்பட்ட இராமாயண கதையின் சிறு பகுதிகளை மாணவர்கள் வாசித்து போட்டியிட்டனர்.

இதில் முதல் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு சிறப்பு பரிசில்களும், வாசிப்பு போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

நடுவர்களாகக் காங்கேசன்துறை நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலய அதிபர் திருமதி வசந்தராணி சுதர்சன், தமிழ் ஆசிரியர் இரத்தினசிங்கம் விஜய், ஊடகவியலாளர் மு.மதிவாணன் ஆகியோர் கடமையாற்றி மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினர்.











# பிரசார சுற்றுப்பயணத்தை மீண்டும் தொடங்குகிறார் விஜய்

## நவம்பர் 5 இல் த.வெ.க. சிறப்பு பொதுக்குழு கூட்டம்

தமிழக அரசு வழிகாட்டுதல்களை அறிவித்த பின்னர் விஜய்யின் சுற்றுப்பயணத்தை தொடங்கவும், அதற்கு முன்பு நவம்பர் 5 ஆம் திகதி சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடத்தவும் த.வெ.க. நிர்வாகக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கரூர் துயரச் சம்பவத்தால் முடங்கிய நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தற்போது மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது. உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களை கடந்த 27 ஆம் திகதி மாமல்லபுரத்தில் சந்தித்து ஆறுதல் கூறிய விஜய், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளை தீவிரப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், கட்சியின் தினசரிப் பணிகளை ஒருங்கிணைக்க 28 பேர் கொண்ட புதிய நிர்வாகக் குழுவை த.வெ.க. தலைவர் விஜய் நியமித்துள்ளார். நிர்வாகக் குழுக் கூட்டம் சென்னையை அடுத்த பனையூரில் உள்ள த.வெ.க . தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. பொதுச் செயலாளர் என். ஆனந்த் தலைமை வகித்தார்.

தேர்தல் பிரசார மேலாண்மைப் பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர்.நிர்மல்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், கரூர் சம்பவம் குறித்த விசாரணை, சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடத்துவது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும், தமிழக அரசு வழிகாட்டுதல்களை வெளியிட்ட பின்னர் விஜய்யின் சுற்றுப் பயணத்தை தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில். "தமிழக வெற்றிக் கழகத்தின் படைக்கலன்களாக நீங்கள் இருக்கையில், நம்மைக் காக்கும் கவசமாக மக்கள் இருக்கையில், அவர்களுடன் நமக்குள்ள உறவையும், அவர்களின் குரலாகத் தொடரும் நம் வெற்றிப் பயணத்தையும் எவராலும் தடுக்க இயலாது. சூழ்ச்சிகளாலும், சூதுகளாலும் நம்மை வென்றுவிடலாம் என்று கனவு காணும் எதிரிகளும் இதை உணர்ந்தே உள்ளனர்.

நமது அடுத்த அடியை இன்னும் நிதானமாகவும், தீர்க்கமாகவும் நாம் எடுத்துவைக்க வேண்டும். இத்தகைய சூழலில் கட்சியின் அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்து விவாதிக்க வேண்டும். இவை குறித்து முடிவுகள் எடுக்கும் பொருட்டு பொதுக்குழுவின் சிறப்புக் கூட்டத்தை கூட்ட முடிவு செய்துள்ளோம்.

அதன்படி, த.வெ.க. சிறப்பு பொதுக் குழுக் கூட்டம் மாமல்லபுரத்தில் நவம்பர் 5 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. வாருங்கள் சிறப்புப் பொதுக்குழுவில் கூடுவோம். வருங்காலம் நமதென்று காட்ட தீர்க்கமாகத் திட்டமிடுவோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# செயற்கை மழை பெய்விக்கும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது

டில்லியில் செயற்கை மழை பெய்விக்கும் திட்டம் தற்போதைக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காற்றின் தரம் மிக மோசமடைந்ததால் டில்லியில் காற்று மாசை குறைக்க செயற்கை மழை பெய்விக்க கான்பூர் ஐ.ஐ.டியுடன் இணைந்து செயல்பட டில்லி அரசு முடிவு செய்தது.

இந்நிலையில் டில்லியில் நேற்று முன்தினம் செயற்கை மழையைப் பெய்விக்க விமானம் புறப்பட்டது. ஆனால் போதுமான ஈரப்பதம் இல்லாததால் திட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஐ.ஐ.டி. கான்பூர் சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறும்போது,

"6 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த விமானம் மூலம் டில்லியின் பல்வேறு பகுதிகளில் திரண்டிருந்த மேகங்கள் மீது ரசாயனங்கள் தெளித்து மழை பெய்விக்க முயன்றது. மேகங்களில் போதிய ஈரப்பதம் இல்லாததால் எதிர்பார்த்த வெற்றி இல்லை. இந்தத் திட்டம் தற்போதைக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ஆந்திராவை புரட்டிப் போட்ட மோந்தா புயல்: ஹெலிக்கொப்டரில் ஆய்வு செய்தார் முதல்வர்

மோந்தா புயல் ஆந்திராவை புரட்டி போட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஹெலிக்கொப்டரில் சென்று ஆய்வு செய்துள்ளார்.

வங்க கடலில் மையம் கொண்டிருந்த மோந்தா புயல் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு காக்கிநாடா - மசூலிப்பட்டினம் இடையே கரையை கடந்தது.

அப்போது சுமார் 100 முதல் 110 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. கோனசீமா, விசாகப்பட்டினம், விஜயநகரம், அம்பேத்கார், ஸ்ரீகாகுளம், பிரகாசம், கிருஷ்ணா, நெல்லூர், கோதாவரி மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் காரணமாக பல வீடுகள் நாசமடைந்தன. மின் கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. பல கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல கிராமங்கள், நகரங்கள் இருளில் மூழ்கின. கோனசீமா மாவட்டத்தில் மரம் விழுந்ததில் 2 பெண்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. பல ஆயிரம் ஏக்கர் நெல், பருத்தி, மிளகாய், வாழை, பப்பாளி, தென்னை மரங்கள் அழிந்தன. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயிர் சேதத்தை விட அதிகமாக பொருள் சேதத்தை இந்த மோந்தா புயல் ஏற்படுத்தி விட்டது. ஆந்திராவில் மோந்தா புயலால் 249 மண்டலங்கள், 48 நகராட்சிகள், 18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர் என ஆந்திர அரசு, மத்திய அரசிடம் தெரியப்படுத்தி உள்ளது.

இந்நிலையில் நேற்று, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அமராவதியில் காணொலி மூலம் புயல் பாதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைச்சர்கள், அதிகாரிகள், எம்.எல்.ஏக்கள், எம்பிக்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். எங்கள் அரசு உங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து தரும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு வருமாறு எடுத்துரைக்க வேண்டும்.

கடைநிலை ஊழியர் முதற்கொண்டு முதல்வர் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டதன் விளைவாக மோந்தா புயலை சிறப்பாக எதிர்கொண்டோம்" என்றார்.

அதன் பின்னர், முதல்வர் சந்திரபாபு நாயுடு, பாபட்லா, பல்நாடு, கிருஷ்ணா, ஏலூரு, டாக்டர் பிஆர் அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களை ஹெலிக்கொப்டரில் சென்று பார்வையிட்டார்.

# பிரித்தானிய பிரதமராக தொடர்ந்தும் நீடிப்பேன்

## கெய்ர் ஸ்டார்மர் அறிவிப்பு



பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மருக்கு பொதுமக்களிடையேயும் கட்சிக்குள்ளும் ஆதரவு குறைந்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், லேபர் கட்சித் தலைமை வேறொருவருக்கு வழங்கப்பட இருப்பதாக வெளியாகியுள்ள தகவலை அவர் நிராகரித்துள்ளார்.

லேபர் கட்சித் தலைமை வேறொருவருக்கு வழங்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகிவருகின்றன. ஆனால், அதை நிராகரித்துள்ள ஸ்டார்மர், தான் தனது பதவிக்காலம் முடியும் வரை தலைமைப் பதவியில் நீடிக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

சொல்லப்போனால், 10 ஆண்டுகளுக்குத் தான் பிரதமர் பதவியில் நீடிக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், சமீபத்தில் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டிய ளித்த லேபர் கட்சியின் முன்னாள் செய்தித் தொடர்பாளரான ஜேம்ஸ் என்பவர், நாளை பிரித்தானியாவில் தேர்தல் நடைபெறுமானால், தான் ஸ்டார்மருக்கு வாக்களிக்கமாட்டேன் என வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஸ்டார்மரின் 10 ஆண்டு பிரதமர் ஆசை நிறைவேறுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# நரேந்திர மோடி மிகவும் நல்லவர்: டொனால்ட் ட்ரம்ப் புகழ்கின்றார்



நரேந்திர மோடி மிகவும் நல்லவர் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆசிய பயணத்தின் ஒரு பகுதியாக தென் கொரியாவின் கியோங்ஜுவில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த டொனால்ட் ட்ரம்ப்,

"நான் இந்தியாவுடன் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போகிறேன்.

உங்களுக்குத் தெரியும், பிரதமர் மோடி மீது எனக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் உண்டு. எங்களுக்கு ஒரு சிறந்த உறவு இருக்கிறது. பிரதமர் மோடி மிகவும் நல்ல மனிதர். ஆனால் சற்று கடினமானவர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போரின்போது, நீங்கள் பாகிஸ்தானுடன் போரைத் தொடங்கினால், நாங்கள் உங்களுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய மாட்டோம் என்று கூறினேன்.

நான் சொன்ன இரண்டு நாள்களுக்குள், மோடியும், ஷெரீப்பும் என்னிடம் பேசி போரை நிறுத்தினர்." என்று தெரிவித்தார். மேலும் இந்த போரில் 7 புத்தம் புதிய போர் விமானங்கள் சுட்டு வீழ்த் தப்பட்டன என ட்ரம்ப் தெரிவித்தார்.

ஆனால் அது இந்தியாவின் போர் விமானமா? பாகிஸ்தானின் போர் விமானமா? என்று குறிப்பிடவில்லை .



# தென் கொரியாவின் உயரிய கௌரவம் டொனால்ட் ட்ரம்புக்கு வழங்கப்பட்டது

எபெக் (APEC) உச்சி மாநாட்டின் பக்க நிகழ்வாக தென் கொரிய ஜனாதிபதி லீ ஜே மியுங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, தென் கொரியாவின் மிக உயரிய அரச மரியாதையை லீ ஜே மியுங், டொனால் ட்ரம்ப்புக்கு வழங்கி, ஒரு பழங்கால கொரிய கிரீடத்தின் மாதிரியையும் பரிசளித்தார்.

இராஜதந்திர நட்புறவின் சைகையாக, கொரியத் தீபகற்பத்தில் அமைதியை நிலைநாட்டுவதில் டொனால்ட் ட்ரம்ப்பின் சாதனையைப் பாராட்டியும், இந்தப் பிராந்தியத்தில் அவர் ஒரு 'சமாதானத் தூதராக' ஆற்றிய பங்கை உற்சாகப்படுத்தவும், தலைவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கொரியாவின் மிக உயரிய விருதான 'கிரேண்ட் ஓர்டர் ஆஃப் முகுங்வா' விருதை லீ ஜே மியுங், டொனால்ட் ட்ரம்ப்புக்கு வழங்கினார்.

கொரிய ஜனாதிபதி அலுவலக தகவலின்படி, இந்த அலங்கார விருதைப் பெறும் முதல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆவார்.

அத்துடன், தியோன்மாச்சோங் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட, சில்லா சகாப்தத்தைச் (கிமு 57 - கி.பி 935) சேர்ந்த தங்க கிரீடத்தின் ஒரு விசேடமான மாதிரியையும் தென் கொரிய ஜனாதிபதி பரிசாக அளித்தார்.

கனடா முரசு
வியாழக்கிழமை | 30/10/2025

## கனடாவில் காட்டுத்தீயினால் வருடாந்தம் 1,400 மரணங்கள்

கனடாவில் காட்டுத் தீயினால் பதிவாகும் மரணங்கள் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கை ஒன்றில் இந்த விடயம் 02▶



# கனடாவில் மீண்டும் பரவும் பறவைக் காய்ச்சல் தொற்று

**கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஃப்ரேசர் பள்ளத்தாக்கு பகுதியில், பறவைக் காய்ச்சல் தொற்றுகள் அதிகரித்துள்ளன.**

**பறவைகளின் இலையுதிர் கால இடப்பெயர்ச்சி தொடங்கியுள்ள நிலையில் நோய் பரவுகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**கடந்த இரண்டு வாரங்களில் அந்தப் பகுதியில் 9 கோழிப்பண்ணைகளில் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இவை, கடந்த ஜனவரி மாதத்துக்குப் பிறகு மாகாணத்தில் உறுதி செய்யப்பட்ட முதல் புதிய பரவல்கள் என தெரியவருகிறது.

முதல் தொற்று ஒக்டோபர் 14 ஆம் திகதி அன்று அபோட்ச்ஃபோர்டு பகுதியில் உள்ள ஒரு பண்ணையில் கண்டறியப்பட்டது.

அதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை முதல் மேலும் 8 புதிய தொற்றுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளில், பறவைக் காய்ச்சல் காரணமாக 8.8 மில்லியனுக்கும் மேற்பட்ட கோழிகள் இறந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கனடாவில் குறைந்தபட்ச சம்பளம் வழங்கும் வேலைகளை பெறுவதுகூட கடினமாகியுள்ளது

கனடாவில் இளைஞர்கள் குறைந்தபட்ச சம்பளம் வழங்கும் வேலைகளைப் பெறுவதுகூட நாளுக்கு நாள் கடினமாகி வருகிறது.

நாட்டின் இளைஞர் வேலைஇல்லா விகிதம் கடந்த சில ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக கனடா புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் படி, செப்டம்பர் மாதத்தில் இளைஞர் வேலை இல்லா விகிதம் 15 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இது 2010 இற்குப் பிறகு காணப்பட்ட




மிக உயர்ந்த நிலையாகும். புதிய வேலை தேடுபவர்களுக்கு வாய்ப்புகள் கிடைப்பது கடினமாகியுள்ளது.

நிறுவனங்கள் புதிய பணியாளர்களை நியமிக்காத சூழல் இளைஞர்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிறுவனங்கள் நிரப்ப முயற்சிக்கும் வேலைவாய்ப்புகள் 15 சதவீதம் குறைந்துள்ளன என அரச புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வேலைவாய்ப்பு சந்தை மிகுந்த நெரிசலாகி வருகிறது. ஒவ்வொரு பதவிக்கும் பல விண்ணப்பங்கள் வருவதால் தேர்வு செய்வது கடினமாகியுள்ளது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.




# ஒட்டாவாவிலுள்ள உணவு வங்கிக்கு 2.5 மில்லியன் டொலர் நன்கொடை

கனடாவின் ஒட்டாவா உணவுக் வங்கிக்கு இதுவரை இல்லாத அளவிலான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை அளிக்கப்பட்டுள்ளது.

இது, 40 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் அமைப்பின் வரலாற்றிலேயே மிகப்பெரிய தனிநபர் நன்கொடையாகும். இந்த பெரும் நன்கொடையை பிராங்க்லின் ஹோறால்ட்ஃபோர்ஸ்டர் மற்றும் அவரது குடும்பத்தினர் வழங்கியுள்ளனர்.

அவர்களின் குடும்பம் ஒட்டாவாவில் 40 ஆண்டுகளுக்கு முன் குடியேறியதாகவும், நகரம் தங்களுக்கு அளித்த வாய்ப்புகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இத்தீர்மானம் எடுத்ததாகவும் ஹோறால்ட்ஃபோர்ஸ்டர் கூறியுள்ளார்.

உணவு பாதுகாப்பின்மை என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்று. உணவு என்பது அடிப்படைத் தேவையாகும். அரசாங்கம் மட்டும் இதைச் சரியாக கையாள முடியவில்லை; எனவே மக்கள் தாமாக முன்வர வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நன்கொடை 10 ஆண்டுகளுக்கு, வருடத்திற்கு 250,000 என வழங்கப்படும். இதன் மூலம் உணவுக் வங்கியின் ஒட்டாவா முழுவதும் பரவியுள்ள வலைப்பின்னல் அமைப்புகள் வழியாக உணவு வாங்கல் மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் 30 மில்லியன் டொலர் திரட்ட வேண்டிய சவாலில் இருந்து நாம் தொடங்குகிறோம். இந்த 10 ஆண்டுகளுக்கான நிதி உறுதி, எங்களுக்கான நம்பகமான ஆதாரமாக இருக்கும் என ஒட்டாவா உணவு வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி ரேச்சல் வில்சன் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு பாரிய தொகை உணவு வங்கிக்கு வழங்கியதனால் ஹோறால்ட்ஃபோர்ஸ்டர் குடும்பத்தின் செயல் அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.





## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிய வந்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் கனடாவில் காட்டு தீ காரணமாக வருடாந்தம் சுமார் 1400 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக புகை மாசடைதல் காரணமாகவும் காலநிலை மாற்றம் காரணமாகவும் இந்த மரணங்கள் அதிக அளவில் பதிவாகியுள்ளன. உலகில் சுமார் 100 மருத்துவ நிபுணர்களின் ஆய்வு மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரைவிலான காலப் பகுதியில் காட்டுத் தீ காரணமாக வளிமாசடைதல் சராசரியாக 172 வீதத்தினால் அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியுடன் ஒப்பீடு செய்யப்பட்டு இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் கனடியர்கள் சுமார் ஆறு நாட்கள் வரையில் வெப்ப அலைக்கு உட்பட்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது. காலநிலை மாற்றம் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக புதைம எரிபொருள்களை பயன்படுத்துவதால் இவ்வாறு காற்று மாசடைகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

காற்று மாசடைதல் மற்றும் வெப்ப நிலை காரணமாக கடந்த ஆண்டு கனடாவில் சுமார் 40 மில்லியன் மனித வேலை மணித்தியாலங்கள் விரயம் ஆக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இது சுமார் ஒன்று தசம் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் வருமான இழப்பு எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் இதனால் பெருமளவு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# அமெரிக்கா - கனடா எல்லை பகுதியில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

அமெரிக்கா - கனடா எல்லையில் 62 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் இந்திய வம்சாவளி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவை சேர்ந்த இந்திய வம் சாவளி லொறி சாரதி சுர்ஜ் சிங் சலாரியா. இவர் தனது லொறியில் 62 கோடி ரூபா மதிப்புள்ள 77 கிலோ கோகைன் போதைப்பொருளை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவில் இருந்து கனடா புறப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், ஆல்பர்ட்டாவில் உள்ள ஒருங்கிணைந்த சுங்கச்சா வடியில் அவர் சிக்கிக்கொண்டார். அவரை பொலிஸார் கைது செய்தனர். அல்பர்டா நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்தப்பட்ட நிலையில், அவருக்கு ஜாமீன் மறுக்கப்பட் டது.

கைது செய்யப்பட்ட சுர்ஜ் சிங் சலாரியா , கால்கேரியா பகுதியில் குடியிருந்தவர் என்பதைத் தவிர வேறு எந்த விவரங்களும் வெளியாக வில்லை.

அவர் கனடாவில் சட்டப்பூர்வமாக வசிப்பவரா அல்லது அத்துமீறி நுழைந்தவரா என்பது தெரியவில்லை.



